**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No.7/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 2 |
| Name | : பொன்ராஜ், வயது 57 |
| Father Name/Husband Name | : நரசிம்மன் |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of July 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து மாற்று பணியாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.11.2024 ஆம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 07.30 மணியளவில் நான், காவலர்கள் 4664 கார்த்திகேயன் மற்றும் காவலர் 4495 தாமேதரன் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்த போது கோவில்பட்டி – சாத்தூர் ரோட்டில் ரோந்து செய்தபோது கிடைத்த ரகசிய தகவலின்படி வேலாயுதபுரம், ரயில்வே மேம்பாலம் அருகில் சென்றபோது அங்கு வெள்ளைநிற பிளாஸ்டிக் பையுடன் சந்தேகத்துடன் நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த கோவில்பட்டி, பழந்தோட்ட நகரைச் சேர்ந்த, ஜேசுதாஸ் மகன் ஆரோக்கியராஜ் என்பவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பையை வைத்துக் கொண்டு போலீசார் பார்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க தனது பெயரை தெரிவித்தார். அந்த பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Black pearl Brandy பாட்டில்கள் 4 எண்ணமும், சுமார் 180 ML அளவு கொண்ட Golden vats Brandy பாட்டில்கள் 2 எண்ணமும் மதுபாட்டில்கள் விற்ற பணம் ரூ.200 ம் இருந்தது.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்றதாகவும், மீதமுள்ள பாட்டில்களை விற்பதற்காக வைத்திருந்ததாகவும் கூறினார். மேற்படி எதிரி சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்டியாகிய பட்டியல் சாட்சி 1 மற்றும் 2 ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் 08.30 மணியளவில் நிலைய குற்ற எண். 548/2024 U/s 4(1)(i), 4(1)(A) TNP Act ஆக வழக்கு பதிவு செய்தேன். **(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகவும் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை எனது பார்வைக்கும் எடுத்துக்கொண்டேன். மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாடசாமி மற்றும் சோலையப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4 பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரியிடம் தக்க பிணையம் பெற்று காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்பு 18.11.2024 அன்று வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். (**படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும், வழக்கு சொத்துக்கள் மதுபாட்டில் சுமார் 180 ML அளவு கொண்ட Black pearl Brandy பாட்டில்கள் 4 எண்ணம் அ.சா.பொ.1 ஆகவும், சுமார் 180 ML அளவு கொண்ட Golden vats Brandy பாட்டில்கள் 2 எண்ணம் அ.சா.பொ.2 ஆகவும், மதுபாட்டில்கள் விற்ற பணம் ரூ.200ம் அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**பின்பு விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

5 வேலாயுதபுரம் பாலம் சுமார் 1/2 கி.மீ. தொலைவு இருக்கும். வழக்கு சம்பவம் எந்த திசையில் நடைபெற்றது என்று அத்தாட்சியில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பை அத்தாட்சியில் கைப்பற்றபட்டதாக துலங்குமா என்றால் துலங்காது. அத்தாட்சியில் எதிரியிடமிருந்து கையொப்பம் பெறப்படவில்லை. எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக அவருக்கு

ரசீது கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது எதிரி மதுபாட்டில்களை விற்றுக் கொண்டிருந்ததாக அத்தாட்சியில் துலங்குமா என்றால் துலங்காது, எதிரி மது விற்பனை செய்தததாக எங்களிடம் சொன்னதாக அத்தாட்சியில் உள்ளது.

6 எதிரி யாருக்கு மது விற்றார் என்று விசாரித்தீர்களா என்றால் யாரும் சாட்சியாக முன்வரவில்லை. சாட்சியாக முன்வராத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தனி அறிக்கை தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக தனிநபர் அவரது சொந்த பயன்பாட்டிற்காக சுமார் 4 1/2 லிட்டர் மது வைத்துக் கொள்ளலாம் ஆனால் விற்பனைக்காக வைத்துக் கொள்ள கூடாது. இந்த வழக்கில் எதிரியிடமிருந்து 6 எண்ணிக்கையில் மதுபாட்டில்கள் கைப்பற்றபட்டடுள்ளதால் அது அரசு அனுமதித்த அளவுக்கு உட்பட்டது என்றால் சரிதான், எதிரி விற்பனைக்காக டாஸ்மாக் கடை அருகே மதுபாட்டில்கள் வைத்திருந்தார்.

7 எதிரி மதுபாட்டில்கள் அதிக விலைக்கு விற்றதாக பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை ஆனால் ரகசிய தகவல் கிடைத்தது. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open
court in the presence of
accused and read over to
the witness and
acknowledged by him/her to
be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.